## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| (அ) கணக்கீட்டு நியம இலக்கம் 3 | உரிமை மூலதனத்தின் சகல மாற்றங்களையும் காட்டும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றொன்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கணக்கீட்டு நியம இலக்கம் 16 | மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக ரூபா 268,407 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நிதிஏற்பாடு முதலீடு செய்யப்பட்டிராததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (இ) கணக்கீட்டு நியம இலக்கம் 18 | மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,172,481 தொகையான நிலையான சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(i) ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பமாகி 3 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| 14(1) ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் இல. 135 | சரியான உள்ளகக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக உள்ளகப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் முறையில் பல உத்தியோகத்தர்களுக்கிடையே பரிசோதனைகளுக்கு உட்படும் வகையில் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் கடமை கையளித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 03 |

பதவிநிலை உத்தியோகத்தர்கள் இருந்த போதும் நிதி அதிகாரக் கையளித்தல்கள் இரண்டு பேருக்கிடையே மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) சுற்றுநிருப அறிவுறுத்தல்கள்

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 6.5.3 ஆம் பந்தி | ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இறுதியாக 2008 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மாத்திரமே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. |
| 8.3.5 (இ) ஆம் பந்தி | பொருத்தமான வகைப்படுத்தலின் கீழ் கூறு விலைகள் கோரப்பட்டு உரிய வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியிருந்தும் அந்நிபந்தனைகளுக்கு முரணாக முன்னைய வருடங்களைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் ரூபா 96,856 தொகை செலவில் ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரம் வாடகை வாகனங்களின் சேவை பெறப்பட்டிருந்தது. |
| 8.3.7 ஆம் பந்தி | பாதீட்டில் குறிப்பிடப்படாத நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 506,640 |

| | |
|---|---|
| | பெறுமதியான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| 9.6 ஆம் பந்தி | வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்குவதற்காக செயலாற்றல் மதிப்பீடொன்று அமுல்படுத்தப்பட்டிராதது டன் 2011 ஆண்டில் சகல உத்தியோகத்தர்களுக்காகவும் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் சம்பள அதிகரிப்புப் பத்திரங்கள் எதுவும் தனிநபர் கோவைகளில் கோவையிடப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு இடர் கடன்கள் வழங்கும் போது நி.பி 135 இன் பிரகாரம் சிபார்சு செய்வதற்கு அதிகாரம் வழங்கப்படாத பதவிப்பெயர்களில் பதவிகளுக்கு உரித்தற்றவர்களினால் கையொப்பமிடப்பட்டு ரூபா 282,004 தொகையான இடர்கடன் தொகை காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படாமல் காசு மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக இரண்டு ஆராய்ச்சி உதவியாளர்கள் மீளாய்வாண்டின் யூன் மாதம் தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

* மேற்கூறப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் மாதாந்த முன்நிகழ்ச்சித்திட்டம் அங்கீகரிக்கப்படாமல் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுகளாக ரூபா 205,850 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

* மேற்கூறப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களினதும் செயலாற்றல் அறிக்கைகளைப் பரிசோதனை செய்த போது ஒரே செயற்பாட்டினை இரு உத்தியோகத்தர்கள் செய்திருந்த சந்தர்ப்பங்களும் நிறுவனத்தின் வேறுரொரு உத்தியோகத்தரின் கடமைப்பட்டியலுக்குரிய செயற்பாடுகளையும் மேற்கொள்ளப் பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 12,662,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 808,065 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக ரூபா 13,325,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொண்டதன் பின்னர் அவ்வாண்டின் நிதிவிளைவுகள் ரூபா 776,544 தொகை மிகையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 1,584,609 தொகையான வீழ்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தது. விஞ்ஞான மற்றும் தொழல்நுட்ப செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின்போது கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 2,279,400 இனால் குறைவடைந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

ஆணைக்குழுவின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடையாதிருந்தமை தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளகரீதியாக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1.225 மில்லியனான 04 செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 2.74 மில்லியனான 03 செயற்பாடுகளுக்காக ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த அளவு ரூபா 0.8867 மில்லியனாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக செய்யப்பட்ட செலவினங்கள் தொடர்பாக அடிப்படைச் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(i)

| **செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்வுகூறப்பட்ட வருடாந்த செலவினம்** | **விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான உள்ளவாறான செலவினம்** | **செலவினம் மற்றும் மதிப்பீடுகளுக்கிடையேயான வித்தியாசம்** | **செயலாற்றலின் சதவீதம்** |
|---|---|---|---|
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | % |
| 4.165 | 0.887 | 3.278 | 21.29 |

(ii) ஐந்து வருட காலத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பின்வருமாறு இருந்தது.

| **ஆண்டு** | **மதிப்பிடப்பட்ட செலவினம்** | **உள்ளவாறான செலவினம்** | **வேறுபாடு** | **செயலாற்றல் சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **%** |
| 2011 | 4,165,000 | 887,267 | 3,277,731 | 21.30 |
| 2010 | 6,090,000 | 3,320,008 | 2,769,992 | 54.52 |
| 2009 | 3,145,000 | 990,286 | 2,154,714 | 31.48 |
| 2008 | 6,501,000 | 2,943,509 | 3,557,491 | 45.28 |
| 2007 | 2,800,000 | 1,632,428 | 1,167,572 | 58.30 |

(iii) இருவருடாந்த மாநாட்டிற்காக மாத்திரம் செய்யப்பட்ட செலவினங்களுக்கு மேலதிகமாக ஏனைய செயற்பாடுகளுக்கான ஆணைக்குழுவின் செயலாற்றல் இதன் பிரகாரம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

| ஆண்டு | மதிப்பிடப்பட்ட செலவினம் | உள்ளவாறான செலவினம் | வேறுபாடு | செயலாற்றல் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| 2011 | 3,665,000 | 887,269 | 2,777,731 | 24.26 |
| 2010 | 3,090,000 | 778,505 | 2,311,495 | 25.19 |
| 2009 | 3,145,000 | 980,431 | 2,164,569 | 31.17 |
| 2008 | 3,546,000 | 948,046 | 2,597,954 | 26.74 |
| 2007 | 2,800,000 | 1,632,428 | 1,167,572 | 58.38 |

### 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதில் கடமை பதவியொன்று நீண்ட காலமாக நிரப்பப்படாது இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அப்பதவியை மேலும் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு பற்றி உரிய அமைச்சின் செயலாளரினால் விசாரணை செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2010 ஆகஸ்ட் 01 ஆந் திகதி பதில் கடமைப் பதவிக்காக ஆணைக்குழுவின் பணிப்பாளராக நியமனம் வழங்கப்பட்ட பதவியாளரினால் அத்தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமல் 01 வருடமும் 04 மாதமும் ஆன காலம் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(ஆ) மீளாய்வாண்டின் போது இணைந்த தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தில் (நாம் நிலையம்) 2011/2012 ஆண்டிற்கான பங்களிப்பாக ரூபா

1,106,693 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது அப்பங்களிப்பிற்காக 03 உத்தியோக்தர்கள் மாத்திரம் பங்குபற்றியமையினால் இந் நாட்டின் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு குறைந்த அளவில் வரையறுக்கப்பட்ட நலன்களே வழங்கப்பட்டிருந்தன.
நாம் நிலையத்தில் இலங்கை கேந்திர நிலையமாக 2001 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு செயற்படுவதுடன் இக்காலப்பகுதியின் போது பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றிய வரையறுக்கப்பட்ட சில உத்தியோகத்தர்கள் இந்நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் தாங்கள் பெற்ற பயிற்சியின் மூலம் இந்நாட்டின் விஞ்ஞான முன்னேற்றத்திற்கு செய்யப்பட்ட பங்களிப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 பதவியணியினர் நிருவாகம்

தனிநபர் கோவைகளின் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தின் சாரதி பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 03 பேராக இருந்ததுடன் நிறுவகத்திற்குச் சொந்தமாக இருந்த வாகனத்தின் எண்ணிக்கை 01 ஆக இருந்தது. இதன் பிரகாரம் மேலதிக இரண்டு சாரதிகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 323,040 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் ஏஎம்-1-2-2006 சம்பளத் தொகுதியின் கீழ் 2003 ஆம் ஆண்டின் போது சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தரின் சம்பளம் திருத்தம் செய்யப்பட்ட போது அவருக்கு உரித்தான சம்பளபடி நிலையினை விட 08 படிநிலைகள் அதிகரித்து சம்பளம் தயாரர் செய்யப்படாமையினால் 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையில் ரூபா 300,126 தொகையானது சம்பளமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 16 பேர்களாக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 13 பேராக இருந்தது. இதன்

பிரகாரம் மீளாய்வாண்டில் 03 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

## 4. கணக்காய்வும் நல்ல ஆளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தனியாக ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 12 வருடங்கள் கடந்திருந்தும் இது வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட செலிவனம் ரூபா 1.33 மில்லியனாக இருந்தது. கொள்வனவு மதிப்பீடுகளில் குறிப்பிடப்படாத 03 சொத்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக ஆண்டின் போது ரூபா 506,640 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) தனிப்பட்ட கோவைகளை நாளதுவரையாக்குதல்

(ஆ) உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தலும் அவற்றினை அமுல்படுத்துதலும்.

(இ) ஊழியர் சம்பளங்கள்

(ஈ) வரவு மற்றும் விடுமுறைப் பதிவேடு

(உ) சம்பள அதிகரிப்புக் குறிப்புக்கள் தனிநபர் கோவைகளில் கோவையிடப்படாமை.

(ஊ) நி.பி 135 இன் கீழ் அதிகாரம் பகிர்ந்தளித்தல்.

(எ) கணக்கீடு (நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு, நாட்குறிப்புப் பதிவுகள் தயாரித்தல் போன்றன)

(ஏ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரித்தல்.